1995 ஏப்ரல் 10]

நடவடிக்கை எடுத்து, அந்த நெடுஞ்சாலை அபாயத்தை தவிர்க்க அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று கள்ளத்தனமாக, சட்டத்திற்கு விரோதமாக மணலோ, அல்லது கல் குவாரிகளோ அல்லது கனிமப் பொருளோ எடுக்கிறபோது அதை மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கோ அல்லது அமைச்சருக்கோ கவனத்திற்கு கொண்டு வருவது தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய கடமை. ஆகவே, அந்தக் கடமையை திரு. தணிகைபாபு அவர்களும் அவர்களுடைய உற்ற நண்பர் திரு. காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 292, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

292—

சத்துணவு திட்டத்தில் ஆட்டு இறைச்சி வழங்குதல்

26647*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு திட்டத்தில் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப்படுவது போல் வாரம் ஒருமுறை ஆட்டு இறைச்சி வழங்கப்படுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் சத்துணவு வழங்கப்படுகிற மாணவ மாணவியர்க்கு ஆட்டு இறைச்சி வாரத்திற்கு ஒருமுறை வழங்கப்படுமா என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டார்கள்.

[1995 ஏப்ரல் 10

வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய அந்த மாணவச் செல்வங்களுக்கு அவர்களுடைய வளர்ச்சிக்கு தேவையான சத்துப் பொருள், புரதப்பொருள், கொழுப்புச் சத்து ஆகியவை இறைச்சியில் இருக்கிற காரணத்தால், வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய அந்த குடும்பங்களில் அப்படிப்பட்ட வளர்ச்சிப் பொருள்களை வழங்குவதற்கு முடியாத காரணத்தால் எதையும் சாதிக்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் பொன்னான ஆட்சியில், மழலைகளுக்கு வழங்கப்பட்ட சத்துணவு கர்ப்பிணிப் பெண்களுக்கும் வாரி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிற சூழ்நிலையில், இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்கு வளர்ச்சி நலனை கருத்திற்கொண்டு, முட்டை சத்துணவில் போட்டாலும் அது சைவ உணவாக கருதப்படுகிற காரணத்தால், இறைச்சி போடுவதைப் பற்றி மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டு இறைச்சி வழங்குவதில் நடைமுறையில் பல சிக்கல்கள் இருக்கின்றன. ஏனென்றால் ஆட்டு இறைச்சி குழந்தைகளுக்கு செரிப்பதற்கு மிகவும் கடினமான ஒரு பொருளாகும். அதை ஒரு மையத்திலிருந்து இன்னொரு மையத்திற்கு எடுத்துக்கொண்டு போவதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டால் அந்த உணவு விஷமாக மாறிவிடுகிற வாய்ப்புகள் இருக்கின்றன. அதைத்தவிர ஆட்டு இறைச்சி வழங்குவதால் அரசுக்கு எட்டு பங்கு அதிகமாக செலவு ஏற்படுகிறது. ஆட்டு இறைச்சியை உடனே சமைக்க வேண்டும். கொஞ்சம் தாமதப்பட்டால் அதை இன்னொரு மையத்திற்கு எடுத்துக்கொண்டு போகிறபோது விஷமாகிவிடும். அடுத்து, ஆட்டு இறைச்சியை தனிப்பட்டவர்கள் சமைப்பதைப்போல சமைப்பதற்கு இயலாது. அரசு ஏதாவது ஒரு பொருள் வாங்கவேண்டும் என்றால், அதற்கு என்ன நடைமுறைகளை எல்லாம் பின்பற்ற வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். அந்த வகையில் இதை வாங்குவதில் இத்தகைய சிக்கல்கள் எல்லாம் இருக்கின்றன. சரியான மேற்பார்வை இல்லாமல் போய் விட்டால், ஒரு மையத்திலே ஏற்பட்டால் கூட அந்த குழந்தைகளுக்கு அந்த உணவு விஷமாகப் போகக்கூடிய நிகழ்வு ஏற்பட்டு விடும். அதுவும் இல்லாமல் ஆட்டிறைச்சி இப்போது கிலோ 100 ரூபாய்க்கு விற்கிறது. அந்த அளவிற்கு இப்போது உள்ள நிதி நெருக்கடியிலே, இந்த நடைமுறைச் சிக்கல்களையும் வைத்துப் பார்க்கிறபோது, இதை வழங்குவதற்கு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஏப்ரல் 10]

முற்பகல் 10-40

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான தலைவர்களுடைய பிறந்தநாளை முன்னிட்டும், பல்வேறு திருநாட்களை முன்னிட்டும், ஊரிலே இருக்கிற முக்கிய பிரமுகர்கள் சத்துணவு சாப்பிட்டுக் கொண்டிருக்கிற மழலைச் செல்வங்களுக்கு இறைச்சி உணவை வழங்க முற்பட்டால், அதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி அளிப்பாரா? அப்படியே அவர்கள், இறைச்சி உணவு விரைவிலே விஷத் தன்மையைப் பெற்றுக்கொள்கிறது என்று சொன்னாலும்கூட, மீன் ஒரு நல்ல உணவு, எனவே, அந்த மீனையாவது—அரசுக்கு செலவு குறைவாக வழங்குவதற்கு--நபர்கள் முன்வந்தால், இலவசமாக வழங்குவதற்கு முன்வந்தால், அதையாவது நம்முடைய மழலைச் செல்வங்களுக்கு வழங்குவதற்கு அரசுத் தரப்பிலே புதிதாக ஒரு திட்டத்தைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டச் சத்து மிக்க பொருட்கள் எவற்றை குழந்தைகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு முன்வந்தாலும், அதை அரசு ஏற்றுக் கொள்ளும். மீன் என்கிற உணவில் முள் இருக்குமானால், அது குழந்தைகளினுடைய தொண்டையிலே சென்று மாட்டிக்கொள்வதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்ற காரணத்தால், அதை அரசு வழங்க இயலாது. இரண்டாவது ஆட்டு இறைச்சியிலே என்னென்ன புரதப் பொருட்களும், தாதுப் பொருட்களும் இருக்கின்றனவோ அவை அனைத்தும், ஆட்டு இறைச்சியிலே இருக்கிற அனைத்தும் முட்டையிலே இருக்கின்றது. முட்டைக்கும் ஆட்டு இறைச்சிக்கும் ஒரு பர்சென்ட்தான் வேறுபாடு உண்டேயொழிய, மற்ற புரதப் பொருட்கள் அனைத்தும் முட்டையிலே இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி அ.தி. சரஸ்வதி.

திருமதி அ.தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆட்டு இறைச்சி போட முடியாது என்று சொன்னார்கள். மாதம் ஒரு முறையாவது, முட்டை ஃப்ரைட் ரைஸ் போடப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[*1995 ஏப்ரல் 10*

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்திற்கு இரண்டு முறை முட்டை வழங்குகிறோம். அந்த முட்டையை அவித்து கொடுக்கிறோம். அதனால் குழந்தைகளுக்கு செரிமானம் ஏற்படக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. முட்டையையும் அரிசியையும் தனித்தனியாகச் சமைத்து கொடுக்கிறபோது, செரிமானம் ஆவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. சிறிய குழந்தைகளுக்கு அவித்த முட்டையைக் கொடுக்கிற காரணத்தால், அவித்த முட்டையினுடைய முழு பலத்தையும் அவர்கள் அப்படியே பெறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் அப்படியே ஒத்துக் கொள்கிறேன். ஏன் என்றால், குழந்தைகளில் வெஜிடேரியன்சும் வருவார்கள்; நான்-வெஜிடேரியன்சும் வருவார்கள். அவர்களுக்கு தனித்தனியாக சமைத்துப்போட முடியாது. ஆகையினால், இறைச்சிக்குப் பதிலாக சோயா பீன்ஸ் கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே, ஊட்டச் சத்து வழங்குகின்ற அனைத்து குழந்தைகளுக்கும் சோயா பருப்போடு கலந்து எல்லா குழந்தைகளுக்கும் உணவு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலை நாடுகளில் இருக்கின்ற குழந்தைகள் எல்லாம் இன்றைக்கு அசைவத்திலிருந்து சைவத்திற்கு மாறி வருகின்ற சூழ்நிலையில், தமிழகத்தில் சத்துணவு சாப்பிடுகின்ற குழந்தைகளுக்கு-- சைவத்தில் இருக்கின்ற அந்தத் தன்மையை வலியுறுத்தும் வகையில்—சைவ உணவு போடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதே, சைவ உணவுதான் வழங்கப்பட்டு வருகிறது, முட்டையை விரும்புகிற குழந்தைகள்தான் உண்ணுகிறார்கள்.

1995 ஏப்ரல் 10]

முட்டையை விரும்பாத குழந்தைகள் உண்ணுவதில்லை. சைவ உணவை சாப்பிடுகிற குழந்தைகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *293*, திரு. செ.து. வரதராஜன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

293—

நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

35381*—திரு. செ.து. வரதராஜன்:**

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெசவாளர்களுக்கான சலுகைகள் முறையாகக் கிடைக்க அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. செ.து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களுக்கு சலுகைகள் முறையாகக் கிடைக்க அவர்களுக்கு அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா? தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் நெசவாளர்களுக்குள்ள பல சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடம் வேலை செய்யும் ஏழை நெசவாளர்களுக்கு இந்த அடையாள அட்டை இருந்தால், எல்லா நெசவாளர்களும் சலுகைகளை அனுபவிப்பார்கள். மீனவர்களுக்கு எப்படி போட்டோ ஒட்டிய அடையாள அட்டையைக் கொடுத்திருக்கிறார்களோ, அதைப்போல, இந்த ஏழை நெசவாளர்களுக்கும் போட்டோ ஒட்டி, அடையாள அட்டை வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சலுகைகளை நெசவாளர்களுக்கு அளிக்கக் கூடிய வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் கீழே வேலை பார்க்கக் கூடியவர்களாக இருந்தாலும்கூட, நிரம்ப